This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# நட்பு

www.writersujatha.com

**ஸ்**கூட்டரில் கூந்தல் பறக்கப் போய் வந்துகொண்டிருந்தவனை கார் வாங்க வைத்ததற்கு சம்பத்துதான் காரணம். கம்பெனி அளித்த நானூற்றைம்பது ரூபாய் அலவன்சும் என்னுடைய கார் மோகத்துக்கு உபரி காரணம்.

“கம்பெனில அலவன்ஸ் தரான். அட்வான்ஸ் தரான்... ஒண்ணு வாங்கிப் போட்டுர வேண்டியதுதானே?” என்றான் சம்பத்.

என் மனைவி, “உங்களுக்கு ஸ்கூட்டரே சரியா... ஓட்டத் தெரியலை... பூனை நாய்க்கெல்லாம் தெகச்சுண்டிருக்கேள், எதுக்கு காரு?” என்றாள்.

ஆபிஸ் கிளார்க் ரங்காச்சாரியை விசாரித்தபோது “ஆமாம் அந்த மாதிரி ஒரு ஸ்கீம் இருக்கு. கம்பெனில முப்பதாயிரம் ரூபாய் வரைக்கும் லோன் தரா. நானூற்றைம்பது கார் அலவன்சும் தரா...”

“உடனே கார் வாங்கிடணுமா ஆச்சார்?”

“கார் வாங்கவே வேண்டாம். எதாவது ஒரு டப்பா இருந்தாப் போறும். நாலு சக்கரம் ஒரு ஆர்ஸி புக் போறும். ஒரு தடவை காரை இன்ஸ்பெக்ஷனுக்குக் கொண்டு வந்துட்டா போறும். இதைக் கூட யாரும் தீவிரமா பார்க்கறதில்லை.”

“அப்ப நான் கூட கார் வாங்கலாம்னு சொல்லு” என்றேன் சந்தோஷத்துடன்.

“வாங்கலாம். ஆனா உங்களுக்கு கார் ராசி மூஞ்சில கொஞ்சம் கூட இல்லை!”

“அது என்ன கார் ராசி?”

www.writersujatha.com

“கார் வெச்சுக்கறாப்பல ஒரு தேஜஸ்! ம்ஹூம்! இருக்கிற வெஸ்பா போறும். அதையே சரியா ஓட்டக் கத்துக்கணும்.”

எனக்குக் கோபம் வந்து, “போயா... உனக்கென்னய்யா...” என்று சத்தம் போட்டேன்.

“எனக்கு ஒண்ணுமில்லைதான். இதோ, அப்ளிகேஷன். போடும் லோனுக்கு மனு!”

ஒரு வாரத்தில் பங்களூரில் இருந்த அத்தனை ‘இரண்டாம் கை’ கார்களையும் பார்த்தாயிற்று. ‘சிங்கிள் ஓனர், ரேடியல் டயர், ரீபோர்’ போன்ற சொற்றொடர்களெல்லாம் அத்துப்படி ஆயிற்று. இந்த நாட்களில்தான் ருக்மிணியைச் சந்தித்தேன்.

பெண்ணல்ல. ருக்மிணி கலரில் ஒரு ஃபியட் கார். சலிம் அலி என்கிற பிரிகேட் ரோடு வீடியோ வியாபாரியின் சொந்த கார்.